# செங்குமுதம்

குயிலன்



தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர்

முதற்பதிப்பு 1944
உரிமை பதிவு செய்யப் பெற்றது

20224

விலை ரூ. 1—4—0

ஹிந்தி பிரசார பிரஸ்—தியாகராயநகர்

# பதிப்புரை

**தமிழ்ப் பண்ணையாளர்**

நண்பர் குயிலன் அவர்கள் சிறு குழந்தைகளுக்காக எழுதிய 'குருவிக் கூடு' என்ற புத்தகத்தை சில மாதங்களுக்கு முன் வெளியிட்டோம். தமிழகத்தில் அதற்கு நல்ல ஆதரவும் வரவேற்பும் இருக்கிறது.

செங்குமுதம் குயிலன் அவர்களின் இரண்டாவது புத்தகம். சிறுகாவியம். "இச் சிறு காவியம் மிகவும் பாராட்டத்தக்க முயற்சி" என்று நமது நாமக்கல் கவிஞர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால் நாம் இதன் உயர்வைப்பற்றிச் சொல்லுவது அவசியமென்று கருதவில்லை. எனினும் குயிலனைப்பற்றி சில வார்த்தைகள். 'குயிலன்' அவர்களின் முழுப்பெயர் கு. இராமலிங்கம். வயது 22. இவர் இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்தவர். தற்சமயம் நம்முடனிருந்து வருகிறார். "தமிழகத்தில் பல பாரதியார்கள் தோன்ற வேண்டும்" என்ற ஆசைக்கேற்ப இவரும் ஒரு பாரதியாராகத் தோன்ற முடியும் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

"உழைப்பவன் உண்கவேண்டும்" என்ற அடிப்படையான கொள்கையை மையமாக வைத்துக்கொண்டு பல கவிதைகள் இயற்றி வருகிறார். இன்னும் பல இயற்றுவார். எல்லாம் தமிழகத்தின் ஆதரவைப் பொறுத்திருக்கிறது.

# இந்த முயற்சி

## நாமக்கல் கவிஞர்

அன்பர் குயிலன் இயற்றிய செங்குமுதம் என்னும் இச் சிறு காவியம் மிகவும பாராட்டத்தக்க முயற்சி.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் தமிழ் மக்கள் இசைத்தமிழையே அதிகமாகப் பாராட்டிப் போற்றி வந்திருக்கிறார்களென்பதை ஆராய்ச்சி இல்லாமலேயே அறியலாம். தமிழன் தான் சேகரிக்கும் அறிவுகள் அனைத்தையும் செய்யுளாகவே சேமித்து வந்திருப்பதை நமக்குள்ள பழைய தமிழ் இலக்கியங்கள் எல்லாம் காட்டுகின்றன.

இதிகாசங்கள், புராணங்கள், கதைகள், சரித்திரங்கள், அந்தாதிகள், கலம்பகங்கள், தூதுகள் முதலிய கவிஞனுக்கு விருப்பமான கற்பனைக்கு இடந்தரக் கூடிய இலக்கியங்கள் மட்டுமல்ல, கணித நூல்களும் சோதிட நூல்களும் வைத்திய நூல்களும் இலக்கணமும் நிகண்டுகளும் முதலிய கற்பனைக்கு இடமில்லாத சாஸ்திரங்கள் கூட செய்யுள் நடையிலேதான் நமக்குக் கிடைத்திருக்கின்றன என்பதிலிருந்து தமிழருக்குள்ள இசை ஆர்வத்தைக் காணலாம்.

தொன்று தொட்டு தமிழ் நாட்டின் எல்லாப் பழக்க வழக்கங்களிலும் கலந்து தமிழ் மக்களின் உதிரத்தில் ஊறிக்கிடக்கும் இந்தக் கவிதைக் காதலை

அன்னிய மொழிகளின் ஆதிக்யத்தால் தமிழின் வளர்ச்சி தடைப்பட்டிருக்கிற தென்று சொல்லப் படுகிற இக்காலத்திலும், பல மாதாந்த, வாராந்த பக்ஷப் பத்திரிகைகளில் பார்க்கலாம். இந்த வெளி யீடுகள் எல்லாவற்றிலும் (அச்சில்லாமல் கையெழுத் துப் பிரதிகளாக உலவுகின்ற பத்திரிகைகளிலும்) கவிதைப் பகுதிகளுக்கு எவ்வளவு சிறப்புச் செய்யப் படுகின்ற தென்பதே இதற்குப் போதிய சான்ருகும்.

தமிழ் மொழியின் இனிமையையும், பெருமையை யும் மறந்துவிட்ட தமிழர்களைத் தட்டி எழுப்ப வென்றே தோன்றிய மகாகவி சுப்பிரமணிய பாரதி யார் செய்துவைத்த திருப்பணியின் பயனுக இப்போது தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சியில் திரு. கு. இராமலிங்கம் அவர்களைப் போன்ற இளங் கவிஞர்கள் எழுதத் தொடங்கியிருப்பது மிகவும் மகிழத் தகுந்த விஷயம்.

குயிலன் அவர்களின் கவிகளில் நல்ல சொல் லாட்சியும் கற்பனை ஆர்வமும் நிறைந்திருக்கின்றன. இவருடைய கவிதா சக்தி வளர்ந்தோங்க வேண்டு மென்று இறைவனை வணங்கி வழுத்துகின்றேன்.

நாமக்கல்

வெ. இராமலிங்கன்.

# வந்தனம்

## குயிலன்

சின்னஞ் சிறு குழந்தை, குறு மணலிலே தளிர்க் கரங்களால் மணலை அள்ளி அங்குமிங்கும் உதறுகிறது. ஆனந்தம் பெருகிவிட்டது போலும்; ஏதோ தன்னுடைய மழலை மொழியில், வாய்க்கு வந்தபடி பாடுகிறது. அது எதற்காகப் பாடுகிறது? ஏதோ அதற்குக் களிப்பு மிகுதியில் பாட வேண்டுமென்று தோன்றியதால். அப்படித்தான் நானும்.

பள்ளிப் பருவத்தில் என்னைக் கவிதை என்ற ஆசை பிடித்துக் கொண்டது. அந்தக் காரணத்தால் என்னுடைய பதினைந்தாவது வயதில் முதன் முதலாக 'காக்கையும் மனிதனும்' என்ற கவிதையை இயற்றி பாரததேவிக்கு அனுப்பினேன். எழுத்தாளர் வழி காட்டி திரு. வ. ரா. அவர்கள், தமக்குரிய வழக்கப்படி என்னை 'பாரததேவியின்' வாயிலாக அம்பலத்தில் கொண்டுவந்து நிறுத்தினார். பின்பு பல பத்திரிகைகளில் தலைகாட்டிக்கொண்டு வரலானேன்.

ஆசை என்பது வேகமாய் வளரக்கூடியது என்று யாரோ சொல்லியிருக்கிறதாக எங்கோ கேள்வி! இரண்டாண்டுகட்கு முன் "என்னுடைய ஆசையின் வளர்ச்சி சிறு காவிய மொன்றைச் சமைக்கவேண்டுமென்றது. இசைந்தேன். நண்பர் பழ. அண்ணாமலையவர்கள் தூண்டுதலாலும் துணையாலும் எழுதி முடித்தேன்.

செங்குமுதம் சிறுகாவியம். ஆரம்பமுயற்சி. இதன் சுவையை நண்பர்கள் விரும்பிச் சுவைப்பார்களென்று நம்புகிறேன். தமிழகம் என்னுடைய ஆர்வத்திற்கு அன்புகாட்டி, என்பணிக்கு ஊக்க மூட்டி வளர்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இக் குமுதத்தை வெளியிட்டுதவும், தமிழ்ப் பண்ணையாளர்கட்கு எனது மனமார்ந்த நன்றி. முகவுரை எழுதித் தந்த நாமக்கல் கவிஞரவர்கட்கு என் வணக்கம்.

முன் காலத்தில் கவிஞர்களை ஆதரிக்க அரசர்கள் இருந்தனர். ஆனால் இன்றையதினம் மக்கள் அந்தப் பதவியை வகிக்கிறார்கள். எனக்கு அன்பும் ஆதரவும் காட்டிவருகிற செட்டிநாட்டு இளைஞர் சமூகத்திற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

தியாகராயநகர்,
சென்னை.

குயிலன்.

தற்சமயம் பர்மாவில்
எங்கோ கண்ணுக்கும்
கருத்துக்கும் எட்டாத
ஓரிடத்தில் இருக்கும் என்
ஆருயிர்ச் சகோதரர்
சோம. சுப்பிரமணியன்
அவர்களுக்குக் காணிக்கை.

படலம் 1

# மழையும் புயலும்

செம்பரிதிக் கதிர்விழுங்கிச்
    சீதமுகில கூட்டம்
சேர்ந்தார்த்து மிகயிடித்து
    மழைமுரசு கொட்ட
கொம்பொடியக் காற்றுமரங்
    கொஞ்சிவிளை யாடி
கோரநகை செய்கின்ற
    நேரமதில் அந்தோ
அம்புவிழி பயம்நிறைய
    நெஞ்சடித்துக் கொள்ள
அடங்காத வேகமொடு
    இடையிலுள்ள குடத்தில்
பைம்புனலைச் சுமந்தங்கு
    கைவீசி யொற்றைப்
பாவைவரு கின்றாளம்
    மாமழைக்கு முந்தி.

வானிடையே மைதீட்டி
    விட்டார்கள் யாரோ
மாமுகிலைத் தண்ணீராய்
    மாற்றிவிட்ட தாரோ

தேனினிய பூங்காவைச்
சிதைக்கிறது காற்று
திக்கற்ற பைந்தொடியாள்
தங்கவிடம் பார்த்தாள்
போனமழைக் காலத்தில்
புதுப்பித்த கோயில்
போகவெகு தூரமில்லை
பக்கத்தி லுண்டு
தானங்கு போயடையக்
குடநீரைக் கொட்டித்
தாளிரண்டும் பாவாமல்
பறந்தோடிச் சென்றாள்.

கதவுக்குத் தாளில்லை
உட்சென்று பார்த்தாள்
கல்விளக்குச் சிறுசுடரை
வீசியெரி கிறது
மதங்கொண்ட யானையெனும்
மேகங்க ளின்னும்
மழைகொட்டித் தரைகடலாட்
பேதமதை மாற்ற
உதயமதித் திருமுகத்தள்
உள்ளம்நடுக் குற்று
உதிர்க்கின்றாள் முத்தாரம்
கன்னங்கள் வழியே
அதுபோழ்து கதவோசை
அடியோசை கேட்டு
அச்சமெலாம் தலைக்கேற
அவள் திரும்பிப் பார்த்தாள்.

பார்த்தாளப் பாவையொரு
பல்முள்ள காளை
பாதம்வழித் தலைநீரே
பாய்ந்தோடும் வேளை
ஆர்த்தாள்தன் வாய்விட்டு
"அடடாநம் அத்தான்."
அக்கணமே வெட்கம் வர
எழுந்தொடுங்கி நின்றாள்.
சேர்த்திரண்டு கண்களையும்
பெண்மீது நாட்டி
"செங்குமுதம் இங்கிப்போ
தேன்வந்தா" யென்றான்
போர்த்தாள்தன் மேனியிலே
நாணமெனும் போர்வை
பொற்குடத்தைச் சுட்டிவிட்டுப்
பேசாது நின்றாள்.

வருணனுடைத் தயவாலே
அன்றிரவி லங்கே
வந்தவர்க ளிருவருமே
சற்றொதுங்க நேர்ந்த
தருணத்தைப் போக்காது
தன்பேச்சை யிழுத்துத்
தையலுடை யுள்ளத்தைத்
தானறிய எண்ணி
"மருதனுக்கு முனக்குமென்று
கல்யாணம்?" எனறான
மான்விழியில் தீபறக்கத்
தான்பதிலைக் கண்டான்

“ அருணன்மேற் றிசையுதிக்கும்
அன்னாளி ” லென்றாள்
அதற்குப்பின் சற்றுநகைத்
துக்குனிந்து நின்றாள்.

“ செங்குமுதம் நானென்று
செப்புகிறேன் கேளாய் !
ஜீவவொளி நீயெனக்கு
வேறில்லை சொன்னேன்
என்குடும்பம் ஏழ்மையுற்று
ஏற்றமற்றுப் போனால்
என்சொந்த முமற்றுப்
போய்விடுமோ என்ன ?
தங்கைமகன் நானிருக்க
மருதனென்ற தடியன்
தனக்குன்னைக் கல்யாணம்
பேசுகிறார் மாமன்
உன்மனத்தை நானறிவேன்
உண்மைதனைச் சொல்வாய்
உனக்கென்னை மணக்க மனம்
உண்டோ மற்றிலையோ ?”

கட்டழகன் வடிவேலன்
சொன்னவுரை கேட்டு
கண்ணீரில் முகங்கழுவி
நாக்குழறச் சொன்னாள்
“ அட்டியில்லை உம்மையன்றி
வாழ்வென்ப துண்டோ ?
யாராரோ ஏதேதோ
சொன்னாலு மென்ன

சட்டென்று கைநீட்டும்,
சத்தியமுஞ் செய்வேன்
சரியாக நாலைந்து
நாட்களுக்கு ளென்னை
எட்டாத தேசத்திற்
கழைத்தேகி யங்கே
யினியமணஞ் செய்திடுவீர்''
என்றுசொலி வேலன்

கைப்பிடித்துச் சத்தியமுஞ்
செய்துவிட்டு நின்றாள்.
காலையிளங் காளைமனக்
கம்பீரங் கொண்டான்
மெய்சிலிர்க்க உணர்ச்சி வெள்ளம்
மேலிட்ட போது
மென்மலரின் குழல்தடவி
"மீண்டுமினி நானு
ஐயையோ வுனைப்பிரிய?
ஆஹா நான் மாட்டேன்!
அன்னமுனை யிப்போதே
கணைலஞ் செய்வேன்
துய்ய கண பதி மேலே
துலங்கிடுமிம் மாலை
தொட்டுன்னைக் கட்டிவிடு
கின்றேனன் பாலே.''

என்று சொல்லி மாலையினை
வடிவேல னெடுக்க
ஏந்திழையும் வணங்கிவிட்டு
மூகனிற்கை வைத்து

நின்றாளப் போது மண
மாலையினைச் சூட்டி
நிமிர்ந்தானப் போதுபல
மின்னல்களும் மின்னி
குன்றோடு மலையுறைதல்
போலவிடி குமுறிக்
கொட்டியது நனமழையை
மலர்மாரி போன்று
தன்றோளில் அலைமாலை
தனைத்தூக்கி மீட்டுத்
தன்றலைவன் மார்பினிலே
சூட்டியபின் பணிந்தாள்.

பின்னரிரு பேர்களுமே
கணபதியைத் தொழுதார்
பெருமழையுந் தானினைதத
வேலைமுடித் தாச்சு
என்னுமந்த எண்ணத்தால்
பெய்யாது நிற்க
இதுவரையிற் காத்திருந்த
இந்துமுகங் காட்டி
புனகைத்துக் காரிரவைப்
போக்கிவிட்ட போது
புதுக்காதற பெருக்கினிலே
புகுந்ததிரு ஜீவன்
கன்னல்நிகர் அமுதம்நிகர்
காதலடா காதல்
காதலனுங் காதலியுங்
கைகோத்தார் வாழ!

படலம் 2

# பறந்த புட்கள்

மதியொளி வேளை தன்னில்
  மனத்துடைக் களிப்பி னாலே
சதிபதி இரண்டு பேரும்
  சரசமாய்ப் பேசிக் கொண்டே
அதிகதூ ரத்தைத் தாண்டி
  அடைந்தனர் சிற்றூ ரொன்றை
வதியுமா களைப்பி னாலே
  சற்றுகண் வளர லானார்.

காரிருள் மறையக் கீழ்வான்
  கதிரவன் வரவு பார்த்துப்
பேரொளி தீட்டப் புட்கள்
  பெருக்கிடு கீத வெள்ளம்
பாரெலாம் பரவி யோட
  மலர்ந்தன பதுமம். மற்றும்
யாரினித் தூக்கங் கொள்வார்
  சோம்புவர் தம்மை யல்லால்.

வேலனும் விழித்தான் கண்ணை
  விழித்தனள் கோதை யாளும்
"காலையு மாயிற் றின்னும்
  கடுவழி நடக்க வேண்டும்
ஓலையாற் பிரிந்த கூரை
  யுடையவிச் சிற்றூர் தன்னில்
கோலமா யயிலே யுண்ணக்
  கூடிய வசதி யில்லை.

"புறப்படாய்" என்றான். "கால்கள்
  பொறுத்திட மாட்டா" தென்றாள்.

"பிறப்பினில் இன்னும் நீண்ட
பெருவழி நடக்க வேண்டும்
குறத்தனஞ் செய்யா தேநீ
குமரியு மிலேயோ" என்று
மறத்தினல் திரண்ட தோளான்
மாதினைக் கேலி செய்தான்.

எழுந்தனள் நடந்தா ளந்த
இளைஞனின் கரங்கள் பற்றி
விழுந்ததே அப்போ தெங்கும்
விண்ணிடைக் கிளம்புஞ் சூர்ய
செழுமொளிக் கிரணம். வேலன்
சென்றிடு வழிக ளெல்லாம்
குளுகுளு காட்சி காட்டிக்
குமுதத்தைக் கொஞ்சிச் சென்றான்.

காடுகள் கடந்தார் நல்ல
கதலியும் பலவும் மாவுங்
கூடிய தோப்பும் நீண்ட
குளிர்புனல் அருவி யெல்லாம்
ஓடிய மலேயும் விட்டே
ஒருபெருஞ் சுனையை வந்து
நாடினர் களைப்பி லங்கே
நடுப்பகல் கழிக்க லானார்.

அன்னங்கள் நீந்தும் பக்கல்
அடர்ந்திடு சோலே தனனில்
இன்னிசைக் குயில்கள் பாடும்
ஏறியே மரத்தில் மந்தி
தன்னுடைப் பெடைக்குக் காய்கள்
கனிகளேப் பறித்துத் தந்து

பன்முறை இவரைப் பார்த்துப்
பயந்துமே மரத்தில் தாவும்.

நீரினைக் குடிக்கச் சென்ருள்
குடித்தபின் நீரி லுள்ள
ஓர்மலா பறித்து வந்தே
உடையவ னிடமே தந்து
"பாருமே இதனை" என்ருள்
பார்த்துமே "உன்கை என்று
யாரிதைச் சொல்வார்?" என்ருன்
இருவரும் நகைத்து விட்டார்.

வேறு

அவ்வமயம் வண்டியுமொன்
றங்குவரக் கண்டார்
"யாரையா வண்டியிலே
எங்கோட்டு கின்றீர்?"
இவ்வாறு வடிவேலன்
கேட்க வண்டிக் காரன்
இன்னுமைந்து மைல்போனல்
பட்டணமொன் றுண்டு
அவ்வூருக் கேகுதையா
வண்டியெனச் சொன்னன்
"அப்படியா? நாங்களுந்தா
னங்குவரு கின்ருேம்.
எவ்வாறும் எமைக் கொண்டு
போய் விடுவீ" ரென்ருன்
இசைந்திட்டான் காதலர்கள்
ஏறினரே வண்டி.

படலம் 3

# புதிய கூண்டு

பட்டணம் வந்தும் பத்துநா ளாச்சு
கரத்தி லிருந்த பணமும் கரைந்தது
தினமும் அநேக செல்வர் வீட்டு
வாயிற் படியை மகிழ்வுடன் ஏறிப்
பேயடித் தவன்போல் பின்னே யிறங்கி
ஒவ்வொரு தெருவாய் ஊரெலாம் சுற்றி
அவ்விளங் காளை அலைந்தான். ஆனல்
வேலை அவன்முன் நினைத்தது போல
சாலையில் கிடக்கும் சரக்கா யில்லை
உழைத்தால் கூலி சளைத்தால் பட்டினி
என்றவ னெண்ணிய தெல்லாம் போச்சு
தெருவழிப் போவான் தெரியும் அரண்மனை
ஒருபுறம் ஆசை ஊக்கங் கொடுக்கும்
மறுபுறம் வெட்கம் மனத்தைத் துளைக்கும்
அப்படி யூசல் ஆடும் மனத்துடன்
சொப்பன உலகில் நடப்பவன் போல
எப்படி யேனும் உள்ளே நுழைவான்
சலவைக் கல்லிழை கூடம் தன்னில்
சிலபேர் கூடிச் சீட்டா டுவரே
பக்கல் இரண்டு பணிக்கம் அவற்றில்
செக்கச் சிவந்த வெற்றிலை யெச்சில்

வேலையாள் சிலபேர் விசிறி வீசுவர்
காலைச் சிலபேர் கவனமாய்ப் பிடிப்பர்
கொட்டைகள் களரியில் குவிந்து கிடக்கும்
அட்ட காசமாய் இருக்குமவ் வேளை
வேலன் வருவான் வேலையாள் ஒருவன்
காலைப் பிடிக்கும் கருவமோ என்னவோ
ஆளை நன்ருய்ப் பார்த்தே அறிந்து
பட்டிக் காட்டுப் பயலெனத் தெரிந்து
'ஆரையா?' வென்றே அதட்டிக் கேட்பான்
சீட்டா டுகிற சீமான் திரும்பி
என்னடா வென்பார். இதுவரை அடைத்த
தன்னுடைத் தொண்டையைச் சரிசெய் தேபின்
"பிரபுவே அயலூர்; பிழைக்க வழியிலை."
"ஆகவே நாங்கள் அள்ளிக் கொடுப்போம்
என்றே எண்ணி இங்கு வந்தாயோ?
போடா தடியா போயெங் காவது
வேலையைப் பார்ப்பாய் ... ... ...
... ... ... விளையா டையா
ஆட்டியன் இறக்கமா? யாருடை யிரண்டு?"
"வேலைக் கலைந்தேன கிடைக்க வேயில்லை."
"சோலையா அந்தத் துஷ்டனை விரட்டு",
என்றே சீறி எறிந்தே விழுவார்
வடிவே லந்தோ வருந்தித் திரும்புவான்.
இப்படி நடந்த தெத்தனை யிடமோ?
ஒருநாள் மாலை ஊரெலாம் அலைந்து
கருகிய முகத்தில் களைப்புத் தோன்ற
மனத்திடைக் கவலை நிறைந்திடச் செல்கையில்

கண்டான் ஒருபெரும் மனையின் வாசல்
முன்னே அளிகள் முரலுஞ் சோலை
சோலையின் நடுவே சுந்தர நீர்த்தடம்
தடத்தின் நடுவே தண்ணீர் பீச்சி
பீச்சிய தண்ணீர் நாற்புறம் பரந்தது
பரந்திடு காற்றில் விரிந்திடு மலர்மணம்
அங்குசெல் வோரை அகங்குளிர் வித்தது
செங்குமு தங்கள் சிரித்தன தடத்தில்
வெண்சிற குடைய செங்கா லன்னம்
தண்புனல் நீந்தித திரிந்தன அங்கே
ஓர்புற மாக உள்ளநாற காலியில்
கூர்வாட் கண்களும் குறுநகை முகமும்
அடர்குழல முடியும் சுடரொளி மேனியும்
உடையவோர் யுவதி, உருண்ட விழிகளும்
பணக்களை சொட்டும் பருத்த தேகமும்
நாற்பது வயதும் நற்றிட மேனியும்
உள்ளவோர் கனவான் உடனிருந் தங்கே
உள்ள மகிழ்வுடன் உரையா டுவேளை
வந்தான் வேலன் வணக்கஞ் செய்தான்
“ எந்தவூ ரப்பா என்னதான் வேலை? ”
எனறிடக் கனவான். இவனுரை செய்வான்
“ குன்றென நிதியும் குணமும் படைத்த
வள்ளலே கேண்மின் வனசை என்றே
உள்ளசிற் றூரின் உயர்குடிப் பிறந்தேன்
கெட்டகாலம் தொட்டுத் தொடர்ந்தது
பட்டணம் தேடிப் பிழைக்கப் பார்த்தேன்
நகரத் தெங்கும் நாய்போ லலைந்தேன்

பகரொணு இன்னல் பட்டுவிட் டோமே
பசியால் வாடிப் பரிதவித் தோமே
ஆடையின்றி வாடையில் மெலிந்தோம்
எனவே சுவாமி ஏழைபால் இரங்கி
என்ன வேலை யாகிலும் ஈந்து
அன்ன மளிப்பீர் அடைக்கலம் புகுந்தேன் ”
என்று பலசொலி இறைஞ்சிட, யுவதி
“ பன்மைப் படவே பேசினீ ரும்முடன்
இன்னும் யாருளர் ? ” என்றுள். வேலன்
“ தாயே என்னுடை மனைவிதா னுண்டு
தூயநல் லறிவும் சுடரொளி மேனியும்
உடையவோர் யுவதி ” என்றுன் நங்கை
“ அப்படி யானுல் அழைத்து வாரும்
என்ன வேலை யிட்டால் செய்வீர்
படித்துள்ளீரா ? ” ... ... ...
... ... ... “ படித்துளே னம்மா !
ஆரும் பாரம் படித்துளேன்” என்றுன்.
இதுவரை பேசா திருந்தவக் கனவான்
“ கணக்கு வேலைக் காளொன் றுண்டு
எனினும் நீயும் இருக்கலாம் மனைவியைக்
கூட்டிவா; தோட்டக் கோடியி லுள்ள
வீட்டினில் குடியிரு விரைந்துபோய் வா ” வென
ஓட்டமும் நடையுமாய் வேலன் ஓடி
மனைவியை அழைத்து வந்தான். கனவான்
பார்த்தார் அவருடை மகளும் பார்த்தாள்
வீட்டையுங் காட்டி வேண்டிய பண்டமும்
ஈட்டிக் கொடுத்தே இருந்திடச் செய்தனர்

காதல ரிருவருங் களிப்புக் கொண்டனர்
ஏதுமே துன்பம் இலைநமக் கென்றனர்
வாழ்வில் இன்பமும் துன்பமும் வருமென
தாழ்வும் உயர்வும் உள்ளது தானென
அறியா அவர்கள் அகமகிழ் வென்னே !
இனிவரும் துன்பம் எத்தனை எத்தனை !
அனைவரும் பின்வரல் அறிந்தன ரென்றால்
வாழ்வினில் இன்பம் வரவழி யுண்டோ ?
நாளெலாம் நமக்கு நஞ்சாய் விடாதோ
இரண்டு திங்கள் இவர்தம் வாழ்வைக்
கரையிலா இன்பக் கடலெனக் கழித்தனர்
இப்படி நீடுவாழ்ந் திருக்கச்
சொப்பனங் கண்டனர் தொடர்ந்த தின்னலே !

படலம் 4

# பிரயாணம்

நன்று வாழ்விளை யன்புடன்
    கூடியே நடத்தி
ஒன்றி வாழ்ந்தனர் வேலனும்
    மனைவியும் உயர்வாய்
குன்று மாநிதித் தனத்தவர்
    மகளிடம் குமுதம்
சென்று மேதினம் நட்பெனுந்
    திரவியம் சேர்த்தாள்

செல்வ ரின்மக ளுஞ்சில
    சிலதினம் வருவாள்
மல்கும் அன்புடன் பலபல
    பேசியும் மகிழ்வாள்
அல்லல் யாவையும் வாழ்க்கையின்
    கதையையும் அவட்கே
சொல்லு வாளிவள் கேட்டதைப்
    புனிதையுந் துடிப்பாள்.

வேலன் வாழ்ந்தவத் தோட்டத்தின்
    பக்கலில் வேறே
சில மிக்கதோர் கிழவியும்
    வாழ்ந்தனள் சிறந்த
கோல மாமயிற் குமுதத்தின்
    உயர்ந்தநற் குணத்தால்

கால மேகிய கிழவியின்
அன்பையுங் கண்டாள்.

ஒருந டுப்பகல் உணவினை
உண்டபின் வேலன்
பெருக ருத்துடை நூலினைக்
கைதனிற் பிடித்து
வருக ருத்துக ளனைத்தையும்
விழிகளால் வாங்கி
அரும னத்திடைச் செலுத்திக்கொண்
டிருந்தன னப்போ.

அங்கொரு புறத்தினில் அமர்ந்திலை
பரப்பிய அடிசில்
செங்க ரத்தினி லெடுத்துத்தன்
வாயிடைச் சேர்த்துப்
பொங்கும் அன்பொடு காதலன்
படிப்பதன் பொருளை
உன்கும் காய்கறி யோடதைச்
சேர்த்துமே யுண்டாள்.

வேறு

அப்போதங் கொருவேலை
யாளும் வந்தே
" அன்புமிகக்கொண்டகணக்
கையா வும்மை
இப்போதே கையோடே
கொணரச் சொன்னார்
எஜமானன் " என்றிடவே
எழுந்தான் வேலன்

அப்படியே இலைதனைவிட்
டெழுந்து கன்னி
"அவர்வருவா ரிப்பொழுதே
நீர்போ" மென்றாள்
குப்பனெனும் அவ்வேலைக்
காரன் சென்றான்
குடநீரிற் கைகழுவிக்
குமுதம் வந்தாள்.

"என்னத்தான் எழுந்திட்டீர்
போதும் போதும்!
இப்படியோர் அவசரத்தை
எங்குக் கண்டேன்
பொன்னைத்தான் பிறரள்ளிக்
கொடுத்தா லுந்தான்
பொறுமையுமே வேண்டாமோ
சொல்வீ" ரென்றாள்
சின்னதிருக் கரத்தால்வெற்
றிலைம டித்தே
திருவாளன் கைகளிலே
கொடுத்த பின்னர்
கன்னத்தி லிருமுத்தங்
கொடுத்தா ளந்தக்
காளையுமே ஈந்திட்டான்
திரும்ப நான்கு.

"போய்வரலா மோ?" வென்றான்
புன்னகைத்தே
"போய்வரும்போ தென்றனுக்குக்
கொணர்வ தென்ன?
காய்கனியா கற்கண்டா
கம்பன் நூலா?
கடிதுரைத்துச் சென்றிடுவீர்"
என அன்னேனும்
"வாய்கனிய இதழ்கனிய
வைக்கும் மற்றோர்
வகைக்கனிதான், வந்தபின்தான்,
வருவேன்" என்றால்
ஆயிழையும் தலையசைத்தாள்
அகல லானான்
அம்மதியைப் பன்முறைகள்
திரும்பிப் பார்த்தே.

முதலாளி தனைவணங்கி
நின்றான் "அப்பா
மூவாயிரம் ரூபா
யெடுத்துக் கொண்டு
அதிவிரைவிற் கோடுமுடிக்கு
நீபோ, நானும்
அடுத்ததினம் காலையிலே
வருவே" னென்று

சதிகார முதலாளி
சொன்னான். அந்தச்
சாத்துவிகப் பையனுமே
சிரமேற் கொண்டான்
அதிகாரன் மனததில்வளர்
காமத் தீயை
அவன்கண்டா னஅவள்தான்
கண்டாள் கொல்லோ ?

படலம் 5

# கூட்டைவிட்டு வெளியே

அமுதமொழிக் காதலனை
அனுப்பி விட்டு
அவன்பேச்சின் இனிப்பெண்ணி
அகம்பூரித்து
குமுதமடுக் களைப்பாண்டம்
கழுவு தற்கே
குனிந்திட்டாள் கிணற்றடியில்
குரலி ழோசை
கமகமவென் றோடிவரும்
வாசத் தோடு
கதவுதட்டு மோசையுடன்
கலந்து வந்தே
திமுதிமெனச் செவிகளிலே
நுழைய வந்தத்
தேமொழியோ வெனநினைந்து
கூர்ந்து கேட்டாள்.

“யாரம்மா கதவுதிற
வுங்க” ளென்ன
யாரெனவே காணுதற்குத்
திறந்தா ளங்கே
கோரநகை காட்டிமுத
லாளி நிற்க
குயிலியுமே அசைவற்று
ஒதுங்கி நின்றாள்

சோரமனத் தோடுள்ளே
புகுந்து கொண்டு
சோர்வுடனே வீழ்பவன்போல்
நடித்த வண்ணம்
" நீரளிப்பாய் களைப்புற்றேன் "
என்று சொன்னான்
நெஞ்சினிலே பயந்தூக்கி
நீர்கொணர்ந்தாள்

களைப்பாறப் புனல்பருகிப்
பக்கத் துள்ள
கட்டிலிலே யுட்கார்ந்து
கனைத்துக் கொண்டே
" குளிப்பதற்கா நீர்மொண்டாய் ?"
என்றே அன்னோன்
கொஞ்சுகிற மொழியினிலே
கேட்டான் பச்சைக்
கிளிக்கோதை இவனுள்ளக்
கிளர்ச்சி கண்டாள்
கீழ்மேலொன் றறியாமல்
திகைத்து விட்டாள்
வெளிக்கிளம்பப் புறப்பட்டாள்
விட்டா னில்லை
" வேலையுண்டோ வொருசேதி
கேளா " யென்றான்

பேதைமிகப் பயத்தோடு
    பேச லானுள்
" பிதாவே நீர் தனியிடத்தி
    லென்னே டிங்கு
ஏதேதோ பேசிடுதல்
    சரியே யில்லை
எழுந்திருந்து சென்றுவிடில்
    நல்ல தாகும்
நீதியிலை பார்த்தவர்கள்
    என்ன வெல்லாம்
நினைத்திடுவர் " என்றுரைத்தாள்.
    நீசன் சொல்வான்
" மாதேயிங் கொருவரிலை
    யிரண்டே பேர்தான்
மனம் வைப்பாய் பெருநிதியம்
    உனதே " யென்றுன.

## வேறு

இந்த வுரைகளைக் கேட்டதும்—மழை
    இடியொலி கேட்டிடு நாகம்போல்
பைந்தொடி நாடி யொடுங்கினுள்—எனில்
    பக்கத்தி லேதுணை யில்லையால்
வந்தது மாபெரும் தைரியம்—அந்த
    மானமில் லாமடை யோனிடம்
" தந்தை யென நினைத் தேனடா—கெட்ட
    சாதிப்பயலென வெண்ணிலேன்."

நங்கை யுரைத்ததைக் கேட்டிலான்—அந்த
நச்சர வொத்திடு மானிடன்
பொங்கும் சினத்தொடு சீறுவான்—"வீதிப்
போன பசிப்பிணி நாய்களைத்
தங்க மனைகொடுத் துண்ணவும்—பணம்
தக்க படியீந்த தெண்ணடி.
கொங்கை வனப்பெழில் தன்னிலே—காதற்
கொள்ளையில் வீழ்ந்தனன் குற்றமோ?"

கேட்டனள் கண்ணகி ஆயினுள்—"மதி
கெட்டகா மப்பித்த மூடனே
வீட்டி லடைகக லந்தனை—உனை
வேண்டிய மட்டும் வணங்குவோம்
காட்டடா நீகற்ற ஏட்டிலே—செய்த
காவற் சுவர்பயி ருண்டதை
ஊட்டி வளர்த்திட்ட பிள்ளையான்—எனக்
குற்றிடு தந்தைநீ யில்லையோ?"

நல்லுரை சொன்னதைக் கேட்டிலான்—கிட்ட
நாடித் துகிலினிற் கைவைத்தான்
மெல்லிய பூங்கொடி கத்தினுள்—"இடி
மேல்வந்து வீழ்ந்தெனைக் கொல்லுக!
அல்லல் துடைத்திடு தெய்வமே—யுனை
அண்டிய நானென்ன செய்குவேன்
வெல்லுமோ வஞ்சகம்? வீழுமோ—நீதி
மேதினியில்" எனத் தேம்பினுள்.

அப்போதோர் தேவதை வந்திட்டாள்—மங்கை
ஆவியை மானத்தைக் காத்திட
எப்போதும் போலப் புனிதைதான்—காண
இன்றைக்கும் வந்தனள் கண்டனள்
" அப்பா உமெக்கென்ன பித்தமா—இந்த
அட்டூழி யஞ்செய எண்ணினாய்
கற்புடை மங்கையர் நஞ்சென—நீரும்
காதினிற் கேட்டதும் இல்லையோ ?

நம்மை யடைக்கலம் புக்கவர்—நன்மை
நம்முடை யென்ப தயர்ந்திரோ ?
விம்மும் அவள்குரல் வேகத்தில்—இந்த
விண்ணொடு மண்ணும் அழியுமே
செம்மை மறந்த விராவணன்—இந்த்ர
தேவனும் மற்ற பலர்களும்
அம்ம ! அடைந்த கதியினை—நீர்
அறிந்தது மில்லையோ ? ஐயையோ !"

தன்மக ளிவ்வாறு சீறிட—அவன்
தாங்கொணா வெட்க மடைந்திட்டான்
மன்னிய வெட்கமும் கோபமாய்ப்—பின்னர்
மாறிடக் கண்கள் சிவந்திட்டான்
" உன்னை யழைத்ததிங் கார்சொல்வாய்—நாயே
ஓடிடென் கண்முன்நிற் காது போ
என்னைத் தகப்பனைப் பேசினாய்—இனி
என்ன நடப்பது பார்த்திடு

வேலன் சிறைப்படப் போகிருன்—இந்த
வேசை தெருவில் அலேகுவாள்
நீலித்தன முள்ள கள்ளியே—இந்த
நிமிடமே வீட்டினைக் காலிசெய்
'கோலத்தைக் காட்டினை நானுமென்—பெருங்
கோபத்தைக் காட்டுவன் பார்த்துக்கொள்."
ஆலத்தை யொத்தவன் சொல்லியே—பின்னர்
அவ்விடம் விட்டு நகர்ந்தனன்.

**வேறு**

செங்குமுதம் நீலவிழி
நீர் சொரிந்தாள்
தேம்பினாள் மோதினாள்
ஓல மிட்டாள்
அங்கமெலாம் நடுங்கினாள்
" ஐய கோவென்
ஆருயிரே நானுமக்கே
எமனே யானேன்
இங்கினிநா னென்செய்வேன்
இறப்ப தேமேல்
இன்னுயிரைப் பிரிந்தவுடல்
இருப்ப துண்டோ
திங்கள்முகம் இனிக்காண்ப
தெப்போ" தென்றே
திசைதெரியா விளங்குயிலுந்
திகைக்கக் கண்டே

நச்சரவன் மகள் புனிதை
தேற்ற லானாள்
நானிருக்கும் வரையுனக்குக்
கவலை வேண்டா
அச்சம்விடு உனைக்காப்பேன்
பிரிய மாட்டேன்
அன்புவடி வேலனை என்
தந்தை யின்றன்
இச்சைபோல் சிறைசெய்ய
முடியு மோதான்
ஏன் வருத்தங் கொள்கின்றாய் ?"
என்று தேற்றும்
அச்சமயம் இருகாவற்
காரர் வந்தார்
"யாரம்மா குமுதம்வெ
யேபோ" என்றார்.

வெம்புகிற குமுதமுடன்
புனிதை சேர்ந்தே
வெளியேறிப் போய்விட்டாள்
இரண்டு பேரும்
அன்புமிகு கிழவிமனை
அடைந்தார் அங்கே
அவ்வளவும் எடுத்துரைத்தார்
அவளுங் கேட்டு

துன்பமிகக் கொண்டிட்டார்
கண்ணீ ராற்றைத்
திறந்திட்டாள் துடித்திட்டாள்
பதை பதைத்தாள்
"என் மகளே உனக்கிந்தக்
கதியா" வென்றாள்
என் செய்வார மூவருமே
அழுது தீர்த்தார்.

படலம் 6

# துணை பிரிந்த பேடு

மாவுலகை மூடி
மறைத்திருந்த பேரிரவும்
சேவலொன்று கூவிடவும்
செல்லத் தொடங்கியதே
வானிலவின் றண்ணொளிதான்
மங்கிக் குறைந்திடவும்
மீனினமும் ஒவ்வொன்ருய்
மிளிர்தலின்றி யேமறைய
மெல்லென்ற வாடை
மேல்வந்து வீசிடவும்
கொல்லென்று மேசிரித்துக்
குமுதங்கள் தாமலர
நந்த வனத்திலுள்ள
நறுமணத்துப் பூச்செடிகள்
தந்தம் மலர்விரிக்கத்
தருக்களிடைப் புள்ளினங்கள்
ஈதென்ன மானிடர்காள்
இன்னுமா நல்லுறக்கம்
ஈதுகாண் கிழக்குத்
திசையும் வெளுத்ததென்றே
ஓலமிட்டுத் தாமலற
ஓசைச் சிறப்புடைய

சோலைக் குயிலினங்கள்
ஸ்தோத்திரங்கள் பாடினவே
புல்லிற் பனித்துளிகள்
பூரிப் புடனொளிர
கள்ளுண்டு ரீங்காரக்
கான்வண்டு தத்தளிக்க
கள்ளுண்ட வண்டுகள்போல்
கால்கள் தடுமாறித
தள்ளுண்டு காமத்தில்
தவிக்கின்ற மாந்தர்களை
எண்ணிச் சிரித்தனரோ
ஏது மறிந்திலன்யான்
விண்புகுந்தான் சூரியனும்
வீசுகதிர்த் தோழருடன்
பாடுபட்டே யோர்சாரார்
பட்டினி கிடந்திடவும்
வீடுகட்டச் சூதாட
விலைமாதர் காதலுக்குச்
செலவிட்டுச் சாய்ந்தவண்ணம்
சீட்டாடி யுண்டிகளை
அளவின்றி யுண்டதனால்
அசீரணத்திற் காளாகிப்
பலமற்றுப் புத்தியற்றுப்
பரந்தகன்ற மார்புமற்று
நலமற்று செய்திகண்டு
நகைத்தனரோ நானறியேன் !

### வேறு

வந்து தோன்றினன் கீழ்திசை வானிடை
வைய மெங்கணும் தங்க முருக்கியே
சிந்து கின்றனன் சூரியன் யாவரும்
சேர்ந் தெழுந்தனர் வேலைகள் செய்திட
முன்தி னத்தினில் வந்தநம் வேலனும்
மூர்க்க னும்முத லாளி வரவினை
நின்று காத்திருக் கின்ற அப் போதிரு
நீதி மன்றத்துச் சேவகர் வந்தனர்.

"என்ன டா விழிக் கின்றனை யுன்னிடம்
இருக்கு மாயிரம் மூன்றை எடுத்திடு
உன்னை யிப்பொழு தேகைது செய்தனம்
உடன் நடந்திடெம் மூர்தனக்" கென்றனர்.
"என்னை யாகைது செய்குவிர் நானெவர்
இல்லத் தட்புகுந் தேகள வாடினேன் ?"
"சொன்ன சொலலினை மீறிடப் போகுமோ
சோர நாய்நட" வென்று கடிந்தனர்.

வேலன் செய்வத றிந்திலன் "ஈதென்ன
விதியடா" வென ஏங்கி நடந்தனன்
கால தூதர்க ளொத்திடு சேவகர்
கடிந் துரைத்தனர் இன்னல் புரிந்தனர்
சிலன வெம்பினன் ஊரை யடைந்ததும்
சிறுவன் தன்முத லாளியைக் கண்டனன்
ஓல மிட்டு நடந்ததைக் கூறினன்
உயர் விலாதவன் மாற்றுரை கீழ்வரும்

" என்ன டாவிது நாடகம், கள்ளனே!
எங்குக் கற்றனை இத்தனை? நானுனை
என்னுடை மகன் போல நடத்தினன்
இந்த த்ரோகம் நினைத்தனை; பாரடா
உன்னை வாட்டுவென் உன்னுடை அன்புடை
உயிருக் கேஉயி ராகிடும் இன்சதி
தன்னை வாட்டுவன் நீதி புகன்றிடத்
தலமு முள்ளது பாரெ "னத் தாவினன்.

அங்கி ருந்தவ னையிழுத் தேகினர்
அரச நீதி நிறைந்திடு மன்றிற்கே
எங்கு நீதி யிருக்குது? செல்வமே
ஈந்து நீதியை வாங்கிடு நாளினில்?
அங்கி நீளத் தரித்திடு நீதியின்
அதிபர் முன்னர் நிறுத்தினர்" அன்னவர்
" இங்கு நின்றிடு வேலவன் கள்வனே "
என்ற ளித்தன ரேயிரண் டாண்டுகள்.

வந்து தோன்றினள் உத்தமி வேலனின்
மனைவி கண்ணகி பைரவி காளிபோல்
சிந்து கின்றது தீப்பொறி கண்களில
சிதறு கின்றது பேச்செனும் முத்தினம்
முந்து கின்றது கோபமும் கோரமும்
மூண்டு விட்டது ஆத்திரம் நெஞ்சிடை
வெந்து நீறின அச்சமும் நாணமும்
வீர மொன்று நிமிர்ந்தது சொல்லுவாள்.

“வஞ்சம் செய்திடு செல்வனே கேளடா !
வையம் கேளுதி ! சேவகர் கேளிரோ !
லஞ்சம் வாங்கிடு நீதியின் ஆழியே !
இரக்க மற்றிடு பாவியே கேளடா !
பஞ்சம் வந்திடிற் காட்டிடை யேபுலி
பசிக்குப் புல்லுணல் கேட்டது முண்டுகொல்!
நெஞ்சி லேகறை யற்றிடும் என்னுயிர்
நிற்கு திங்கொரு கைதியெ னச்சொலி !

கடலை விட்டுப் பிரித்தனர் மீனினைக்
கன்றை விட்டுப் பிரித்தனர் ஆவினை
படரும் மென்கொடி பற்றிடு கோலினைப்
பறித் தெறிந்தனர் பாவியர் என்னுடை
உடலை விட்டுப் பிரித்தனர் ஆவியை
உண்டு நீதியும் உண்டுகொல்? உண்டுகொல்?
இடர் உறுத்திடு மாந்தர்கள் பெண்களை
ஈன்ற தில்லைகொல் ஈன்றது மில்லையோ ?

நீதி யுண்டுகொல்? தெய்வமு முண்டுகொல்?
நெறியு முண்டுகொல்? புத்தகந் தன்னிலே
ஓதி வைத்திடில் நீதியு மாகுமோ ?
உண்மை யற்றிடு நெஞ்சிடை, முற்றிடு
சாதி வேற்றுமை கொண்டிடு நெஞ்சிடை
சமய வேற்றுமை, செல்வத்தி னாசையே
மோதி நின்றிடு நெஞ்சிடை, நியாயமும்
முளைக்கு மோ?”வெனக் கர்ச்சனை செய்தனள்

மன்றத் துள்ளவர் யாவரும் பேசிலர்
மண்ணி னுற்செய்த பாவையை யொத்தனர்
சென்று வேலனின் காலிடை வீழ்ந்தனள்
செயலு மற்றனள் பெண்மணி. காளையும்
ஒன்றும் செய்வ தறிந்திலன் கண்வழி
உதிர மூற்றினன். கற்பனை வானிடை
நின்று மீண்டிடு சேவகர் கைதியை
நினைத் திழுத்தனர் வெஞ்சிறை சென்றிட.

பெண்ணைப் பார்க்க மருத்துவர் வந்தனர்
பேதை நச்சர வன்மகள் வந்தனள்
கண்ண ராவியைக் கண்டனள் வாய்விட்டுக்
கதறி னுள்துடித் தாளழு தாளரோ
தண்புனல் தவிர்த் தேபறித் திட்டழு
தரையில் வீழ்ந்து கிடந்தழு வாடியே
மண்ணில் வாழ்க்கையின் இன்பமும் இன்னதே
மனத்தில் யாரிதை எண்ணிடு கின்றனர்!

படலம் 7

# பேட்டைத் தேடிக் காட்டுவழி

நாட்களும் மதிகளும் நடந்தன விரைவாய்
ஆண்டுக ளும்மிரண் டானதெப் படியோ?
உலகம் பலவாய் மாறுத லுற்றது
பலபல புதுமை பலபல தோற்றம்
வேலனும் சிறையை விட்டே வந்தான்
கோலமும் மாறினன் குணமும் மாறினன்
பொறுமை எங்கோ போயொடுங் கியது
வறுமையால் வாடி வளர்ந்த தாடி
கவலையாற் சுருங்கிக் கறுத்த நெற்றி
மெலிந்து வளைந்த மேனி யிங்ஙனம்
வெளியில் வந்தான். விரைவுடன் நடந்து
தான்முன் வசித்த சிறுமனைப் பக்கலில்
வசிப்போர் தம்மிடம் வந்தான் "அம்மா!
குமுதம் எங்கே? குலவிளக் கெங்கே?
அமுதம் எங்கே? அகவிளக் கெங்கே?
என்னுயி ரெங்கே? இன்முக மெங்கே?
அன்னம் எங்கே? அறியா இளங்குயில்
எங்கெ" னக் கேட்டான் "எங்கோ அறியோம்
சின்னாள் அவளும் சீமான் மகளும்
உன்வீ டடுத்த கிழவியி னுடனே

வாழ்ந்தன ரப்போ திரண்டு மாதக்
கெர்ப்பிணி குமுதம். கிழவியும் மாண்டதால்
போந்தன ரிருவரும் புக்கிடம் அறியோம்''
என்றுரைத் தனரால் ஏங்கிய வேலவர்
பித்தன் போலப் பிதற்றித் திரிந்தான்.
"யாங்குற் றனையோ? யாங்குற் றனையோ?
தீங்குரல் குயிலே சென்றனை யெங்கே?
முத்தொளிர் பற்காள்! முல்லை நகையே!
பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனியே!
நீண்டு செவிதொடு நீல விழிகாள்!
காண்டொறும் களியளி காந்திகொள் முகமே!
வேண்டிய வெல்லாம் விரைந்தளி கரங்காள்!
யாங்குற் றீர்கொல்? யாங்குற்றீ'' ரெனத்
தாங்கொணுக் கவலையால் தாக்குற் றவனும்
அழுது புலம்பித் திரிந்தான
பொழுதுஞ் சிற்சில போயதிப் படியே!

### வேறு

அன்று மாலையிற் செங்கதிர் வீசியே
அருணன் மேற்றிசை மாமலை ஏகவும்
நின்ற தாமரைக் கன்னி வருந்தினள்
நெஞ்ச கத்தினிற் பொங்குதுக் கத்தினல்
குன்றி வாடி வதங்கிக் குனிந்தனள்
கூடு தேடிப் பறந்தன புள்ளினம்
கன்று தேடி நடந்தன ஆவினம
கருமை பூசிய தியற்கையும் வானிடை

வேலன் வீதி வழித்திரி கின்றவவ்
வேளை தன்னெதிர் ஆளொன்று கண்டனன்
காலம் ஆனதனாலவன் யாரெனக்
கண்டு கொண்டிலன் ஆயினும் அன்னவன்
கோல மெப்பொழு தோகண் டிருக்கிறான்
கொஞ்சம் யோசித்த பின்னர் அறிந்தனன்
மாலை மங்கிய காரொளி தன்னிலே
மருத னென்பதைக் கண்டு மகிழ்ந்தனன்

## வேறு

"வா தம்பி மருதப்பா
க்ஷேமந் தானா?
வனசையிலே எல்லோரும்
சுகமா" வென்றான்
பேதித்தான் மருதன்பின்
தெளிந்தான். "அடடா
பெண்குட்டி யொருவர்க்குஞ்
சொல்லா தெங்கோ
ஆதித்தன் புலர்வதன்முன்
னோடிப் போன
அண்ணாவா? உருவமெலாம்
மாறி விட்டாய்!
ஈ தென்ன நீள் தாடி,
மீசை அம்மா!
எல்லாமும் வேடிக்கை"
என்று நக்கான்

" உன்னோடு அவளோடி
வந்து விட்டாள்
ஊரெல்லாம் இப்பேச்சு
நாங்க ளெல்லாம்
பன்னாட்கள் வெளி யேற
வில்லை தேடிப்
பார்க்காத வூரில்லை
பட்டி யில்லை
உன் தாயும் இறந்திரண்டு
வருட மாச்சு
ஒருகடி தம் போட்டாலென்
அதுபோ கட்டும்
என்னாச்சு 'பைராகி'
போலாய் விட்டாய்?"
என்றென்றும் தெரியாதோன்
போலே கேட்டான்.

ஆயிழையைப் பிரிந்ததுயர்
அதுவோர் பக்கம்
அடங்காத பசித்துயரம்
அதுவோர் பக்கம்
தாயிறந்த துயர்கேட்டே
அதுவோர் பக்கம்
தாங்காது நீருகுத்தான்
தரையே தன்னை

நீ யிறந்து பட்டா மா
பாவி யென்மேல்
நிற்காதே போவென்று
நிந்தித் தேதன்
வாயாரச் சொல்வதுபோல்
பிரமை கொண்டான்
மனங்கரைந்தான கண்கரைந்தான்
மயங்கி நின்றான்.

" மருதப்பா நாங்களிரு
பேரும் செய்த
மனக்கோட்டை பாழாச்சு
மனித வாழ்க்கை
கருதற்கு மொண்ணாத
கசப்பே யாச்சு
காலனெனும் முதலாளி
வஞ்சத் தாலென்
திருநுதலைச் செவ்விதழைத்
தடக்கண் ணாளைத்
தேமொழியைப் பைங்கிளியைப்
பிரிந்து விட்டேன்.
இருவருடம் ஆச்சந்தோ
எங்குங் காணு
திளைத்திட்டேன்" என்றழுதான்
என்னே துன்பம்!

புதுமனிதன் மருதப்பன்
வஞ்சங் கொண்ட
புன்மனத்தன் சிரித்திட்டான்
புகல்வான் பின்னர்
“ இதுதெரியா தாவுனக்கே
அவளைக் கண்டேன்
இன்றோடு நாலைந்து
நாட்க ளாச்சு
புதல்வனுடன் புருஷனுடன்
இன்னு மற்ற
போகமுடன வாழ்கின்றாள்
நீதான் காதல்
மதுவுண்டு தவிக்கின்றாய்
காத லெல்லாம்
மனக்கோட்டை வெறும்பித்தம் ”
என்றுரைத்தான்.

“ என்ன இது விளையாட்டா
உண்மை தானா ?
என் குமுதம் அப்படியும்
செய்தா ளென்று
இன்னுமொரு தரம்சொன்னால்
மீள மாட்டாய்
என்னிலையைத் தெரிந்துமட
கேலி வேறா !

இன்னுயிரை, இலக்குமியை,
இன்ப ஊற்றை
இக்காலத் திருந்ததியை
இழிவு சொன்னாய்
மன்னித்தேன் அறிந்திலைநீ
வேறு யாரோ
வாஞ்சைமிகு குமுதமிலை''
என்று சொன்னான்.

"அடித்தாலும் அடித்திடுவாய்.
உண்மை சொன்னால்
யாரிந்தக் காலத்தில்
சரியென் பார்கள்!
பிடித்தமுயல் கால்மூன்றே
உண்மை யென்று
பேசுபவ ரிடம்பேசு
உன்சி ரத்தில்
அடித்துச்சொல் கின்றேன்நான்
அறிந்து கொள்வாய்
அப்பாசத் தியமாக
அவளே'' என்றான்
துடிக்கின்ற மனத்தோடு
''எங்குக் கண்டாய்
சொல்'' லென்றான் வடிவேலன்
துயரத் தோடே.

வேறு

மருதன் :—

ஓர்நாள் யானும் நண்பன் ஒருவனும்
தேர் நிலை யென்னும் சிற்றூர் தனக்கு
சென்றனம் அன்று சிறப்புடன் அங்கு
என்றுமே காணு இயல்புடன் கூட்டம்
கூடி யிருந்தது குமுதமங் கிருந்தாள்
ஈடிலா அழகும் இளமையும் நிறைந்த
மற்றொரு பெண்ணும் அவளரு கிருந்தாள்
என்னே அவளுடை எழிலே! எழிலே!!
பொன்னே போன்ற பொலிவொளி மேனி
அன்னம் போன்றது அன்னவள் நடையே
மென் மலர்க் கொடிதான்..........."

வடிவேலன் :—

..........." மேலும் வேண்டாம்
என்னுயிர்க் குமுதம் எப்படி யிருக்கிறாள் ?"

மருதன் :—

" இன்னொரு ஆணிடம் இருப்பதை யறிந்து
கொள்
அவளுக் கொற்றை ஆண்மக வுண்டு."

வடிவேலன :—

"எப்படி யறிந்தாய் இவையெலாம் மருதா?"

மருதன் :—

" அப்படிக் கேளு ! அதுவா சொல்வேன்.

கேட்டேன் பிறரை. கேளவர் சொன்னதை
குமுதமும் இன்னொரு குமரியும் குழந்தையும்
அமுதா னந்தன் என்னுமோர் ஆணும்
சேர்ந்து தேர்நிலைப் பக்கலில் மற்றோர்
ஊர்தனை ஆக்கி உதவாச் சோம்பல்
பயல்களைப் பெண்களைப் பார்த்துக்
கொணர்ந்து
வயல்கள் புஞ்சைகள் வனப்புறு சோலைகள்
சிறுசிறு அழகிய வீடுகள் செய்து
வாழ்கின் றனராம்! வாரம் ஒருநாள்
அயலூர் சென்று ஆட்களைக் கூட்டி,
பயலும் அந்தப் பரத்தைகள் தாமும்
பேசுகின் றார்களாம் பெரியவே டிக்கை
யதோ சங்கமாம் இன்பப் பண்ணையாம்
தீதோ நல்லதோ சேர்ந்துவாழ் கின்றனர்.
நெருப்பும் பஞ்சும் நீரும் மோரும்
இருந்திடி லொன்றாய் எப்படி இருக்கும்?"
என்றே கூறி ஏளனத் தோடு,
நிற்கும் வேலனை நிமிர்ந்து நோக்கினான்
வேலனின் மனநிலை விளம்பப் படுமோ?
சுடுநெருப் புற்ற புழு வெனத் துடித்தான்
கடிதினில் அவளைக் கண்டே கொன்று
இரத்தம் உறிஞ்சிட எண்ணினான் பாவம்!
"இலவினை மாவென எண்ணினே னந்தோ!
மின்மினி தன்னை மிளிர்மணி யென்றேன்!
நஞ்சினை அமுதென நம்பினே னென்னே!

இச்சகத் தெனக்கே இன்பமும் உண்டுகொல்!
அருமைத் தாயை அன்புத் தந்தையை
பெரிதென வெண்ணிலேன் பேதைமை
யென்னே !
அன்புகாட் டியதெலாம் அலகிலா நடிப்போ?
என்பிரி வாலவள் ஏங்குவா ளென்றே
நம்பியே நைந்தேன் நானோர் அறிவிலி
பொய்யோ அனைத்தும் பொய்யோ உலகம்!
ஐயோ பெண்கள் அங்கம தெல்லாம்
பொய்கொடு சமைத்தான் போலும்
நான்முகன் !
வேனகு கண்களில் விடந்தான் வைத்தான்
தேனிகர் பேச்சும் தேர்ந்தநற் பசப்போ !"
என்றே பலவா றெண்ணியே நைந்து
மருதா வாபோய்ப் பார்க்கலாம் என்றே
திரும்பிப் பார்த்தான். மருதனங் கில்லை
தெருவிலும் ஊரிலும் தெளிவிலா வேலன்
மனத்திலும் இருளே மல்கி யிருந்தது
சினமும் வருத்தமும் செல்வழி காட்ட
காரிரு ளூடே தேர்நிலை நோக்கி
நடந்தான் தனியே. நரியின் ஊளையும்
அடர்வன மரங்கள் அசையும் ஓசையும்
ஆந்தைகள் அலறலும் அவன்நிலை கண்டு
சேர்ந்தழு தனவெனச் செப்பிட லாமே !

படலம் 8

# அடிபட்ட பறவை

வடிவேலன் வருகின்றான்
இரவி லெல்லாம்
வழிநடந்த களைப்போடு
வயல்களூடே.
விடிகின்ற அவ்வேளை
வேலை செய்ய
விரைகின்ற உழவர்கள் தம்
வியப்பு மிக்க
அடியோடு முடிவற்ற
கீத மெல்லாம்
அவன் காதில் விழவில்லை
அந்தோ வன்னோன்
இடிகின்ற மனக்கோட்டை
பார்த்துத் தாழா
தேக்கமுடன் வருகின்றான்
சாலை யோடே

சாலைக்கு மேற்புறத்தில்
பெரிய ஏரித்
தண்ணீரில் தாமரைகள்
தங்கள் காதற்
காலையிளங் கதிரவனைக்
கண்டு நக்குக்
களிவண்டு சுதிமீட்டக்
கானப் புட்கள்

சீலமிகு பண்ணிசைக்கக்
கண்ணுக் கெட்டும்
திக்கெல்லாம் முழுவளமே
சிறந்து நிற்கும்
கோலங்காண் கின்றவர்கள்
மகிழ்வு கொள்வார
கொண்டிலனே வடிவேலன்
கொதிப்பு மிக்கோன்.

இரவெல்லாம் வழிநடந்த
களைப்பி னாலும்
இதயத்துட் பொங்கியெழு
துக்கத் தாலும்
வருவதுவும் போவதுவும்
கவன மில்லை
வழியெல்லாம் பொறிபோலே
நடந்து வந்தான்
வருகின்ற அவ்வேளை
மோட்டா ரொன்று
வருகின்ற வொலிகேட்டே
யொதுங்கி நின்றான்.
இருவிழியால் தற்செயலாய்ப்
பார்த்தான் அஃதில்
என்கண்டு மலைப்புண்டு
இவ்வா றானன் !

நச்சரவந் தீண்டிவிடிற்
கோடை கால
நடுக்கமுறும் இடிவீழிற்
பிறந்த வூரில்
பிச்சைகொள நேரிட்டால்
பேணிப் போற்றி
பிரியமுடன் வளர்த்தமகன்
இறந்து விட்டால்
அச்சமயம் உண்டாகும்
உணர்வு கொண்டான்
அன்புகொண்ட மனைவிமறு
ஆடவன்பால்
இச்சையுடன் செலக்கண்டே
உயிரோடுந்தோ
எரியுற்ற உடல்போல
இடருற்றுனே

"தாய்தந்தை தமைவிட்டே
உன்னை நம்பித்
தனியாகப் புறப்பட்டேன்
மாதுருக்கொள்
பேய்நீதான். வன்மனத்துக்
காமப்பித்தி.
பெரும்பரத்தை, உனக்காகச்
சிறை புகுந்தேன்

நாயினிலும் கடைப்பட்டுத்
தெருத் தெருவாய்
நானலைந்தே இரந்துண்டேன்.
ஆறு லந்தோ
நீயோமற் ருெருவனிடம்
ஆசை வைத்து
நெறிதவறித் திரிகின்ருய்
நீலி யாளுய்

இப்பொழுதே உனைத்தொடர்வேன்
காரின் பின்னே
எங்கேபோய் நின்றிடினும்
அங்கு வந்து
அப்படியே உனைக்கடித்துச்
சதை பிளந்து
அருந்திடுவேன் உன்னுதிரம்
மடிவாய் நீயும்
இப்புவியில் எனக்கின்பம்
இனிமே யில்லை
எப்படியும் உயிர்விடுவேன்
என்று கூறிச்
செப்பரிய கோபத்தால்
பித்தன் போலச்
செங்குமுதம் போங்காரைத்
தொடர லானுன்

கண்மயிழந்து இவனிற்க
மோட்டார் தானும்
கடும்வேகத் தொடு மறையச்
சாலை தன்னில்
அமைதியிலா மனத்துடனே
ஓடி வந்தான்
அச்சமயம் பின்னாலே
மற்றோர் காரும்
இமை கொட்டு நேரத்தில்
காத வேகம்
எனவிரைவில் வந்தவன்மே
லேறிற் றந்தோ
"குமுதம்" என அலறியவன்
வீழ்ந்து விட்டான்
கொடுமையடா குருதிநதிக்
கோரந் தானே !

# பொதுக் கூண்டு

இதுகாறும் வடிவேலன்
பின்னே சென்றீர்
இளங்குமுதம் புனிதையுடன்
எங்குச் சென்ருள்
சதிகாரன் என் செயதான்
என்று காணீர்
தம்பி மரு தப்பன்சொல்
வார்த்தை தன்னில்
மதிமுகத்துக் கோதையர்கள்
அமுதா னந்த
மன்மதனின் காமத்திற்
காளாய் விட்டார்
இதுதானே நீவிரெலாம்
அறிந்த சேதி
இனிச்சொல்வேன் உண்மையினை
இசைந்து கேட்பீர்

பெண்மான்கள் சின்னுட்கள்
கிழவி வீட்டில்
பெருந்துயரத் தோடிருந்தார்
கிழவி மாண்டாள்
கண்கட்டி விட்டதுபோல்
குமுதம் அந்தோ
கர்ப்பமுடன் பரதவித்துப்
புனிதை யின்பால்

" விண்ணுயரும் மாடமொடு
செல்வ முள்ள
மென்மலரே நானலைதல்
தலையெழுத்தாம்
கண்மணியே யுன்வீட்டிற்
கேகி வாழ்வாய்
கழுத்துண்டு கயிறுண்டு
எனக்கே" யென்று

செங்குமுதம் உரைத்திட்டாள்
புனிதை சொல்வாள்
" திருமணியே நானுன்னைப்
பிரிந்து பின்னர்
எங்கேகி வாழ்ந்திடவோ
இரண்டு பேரும்
இவ்வூரை விட்டகல்வோம்
என்மே லுள்ள.
தங்கநகை தமைவிற்றே
உண்போம் பின்னர்
சாண்வயிறு வளர்த்திடுவோம்
அன்றிச் சாகோம்
செங்கதிரோன் திசைமாறி
உலவு போதும்
திருநுதலே உனைப்பிரியேன்
தெரிந்து கொள்வாய்."

## வேறு

மாதர் திலகமெனும்
　　மங்கையிரு பேர்களுமே
போதிரண்டில் மற்றோரூர்
　　போயடைந்தா ரவ்வூரில்
பூவிற்கும் பண்டாரப்
　　பெண்ணைச் சரண்புகுந்து
" தேவர் திருத்தொண்டே
　　செய்கின்ற அம்மாகேள்
யாங்கள் அயலூர்
　　இடர்ப்பட்டே யிங்குற்று
தீங்கின்றி வாழ
　　நினைத்தோம் தெரிந்திடுவீர்
என்னிடத்தி லுள்ள
　　சிலநகையை இவ்வூரில்
பொன் விலைக்குக் கொள்வோ
　　ரிடம்விற்றுத் தந்திட்டால்
நின்னை மறக்கவல்லோம்
　　நெஞ்சிற் கருணைவைத்து
அன்னே உதவிடுவீர் "
　　என்றழுது சொன்னார்கள்
பண்டாரப் பெண்ணும்
　　பரிந்தே மனமிரங்கி
" தண்டா மரைத்திருவை
　　ஒத்திட்ட தங்கையர்காள்
இங்கோர் வணிகருளார்
　　அன்னவர்பாற் சென்றிறைஞ்சி

உங்கள் குறையிரந்தால்
உண்டே உதவிபல ”
என்றுசொல்லிப் பெண்கள்
இருவரையும் அவ்வணிகர்
நன்மா ளிகைக்கே
அழைத்து நடந்திட்டாள்
அவ்வணிகர் ஓர்தனவான்
அஞ்சாத நெஞ்சுடையார்
எவ்வுயிரும் தன்னுயிர்போல்
எண்ணுங் கருத்துடையார்
அன்பு நிறைகல்வி
ஆற்றல் மதிநுட்பம்
இன்சொல் அருளுடைமை
ஈகையெலாம் மன்னியவர்
குன்றொருத்த மாநிதியைக்
கொட்டிச் செலவழித்தே
நன்றென்னும் பல்லறங்கள்
செய்கின்ற நாட்டமுளார்
அன்னவர்பால் சென்றந்தப்
பூவிற்கும் ஆரணங்கு
இன்னலுறு பெண்கள்
இடருறுத்துஞ் செய்திகளைச்
சொன்னாள் அவர்கேட்டுத்
துக்கித்தார் பின்னர்
பரிவு மிகுந்திட்ட
பார்வையுடன் கேள்விபல

பெரிதுமே ஆவலுடன்
கேட்டாரப் பெண்களிடம்
ஆதிமுதல் அன்றுவரை
எல்லாம் அறைந்திட்டார்
" மாதர்க் கரசிகாள்
சற்றும் மயங்கற்க
ஏதுங் கவலைக்
கிடமில்லை என்னுடைய
நண்பர் அமுதா,
நத்தமெனும் பேருடையார்
உண்மை உயர்தொண்டர்
உள்ளத் துறவுடையார்
ஏழை எளியவர்க்கும்
ஏக்கமுற்று வாழ்பவர்க்கும்
தோழர் துணைவர்
சுதந்திரத்தில் வேட்கையுளார்
அன்னோர் ஆச்சிரமம்
வைத்துள்ளார் அன்னதனில்
இன்னல் எதுவுமின்றி
வாழுதற் கேதுவுண்டு
பின்னர் வடிவேலர்
வந்ததூஉம் பெண்மணிகாள்
அன்னார் மனம்போல்
நடக்கலாம் " என்றுரைத்தார்
பெண்கள் இசைந்திட்டார்
அன்றைக்குப் பிற்பகலில்

உண்டு முடிந்தபின்னர்
ஓர்காரில் மூவருமாய்
ஆச்சிரமஞ் சென்றார்கள்
அஃதின் அழகென்னே!
தாழை வளர்வேலி
தண்மணத்தை வீசிடவும்
வாழைக் கனிபறிக்கும்
மந்திகளின் மாகூட்டம்
மாதர் அடிபழிக்கும்
மாமரத்தின் செந்தளிரைக்
கீதம் இனிய
குயில்கோதிக் கூவுவன.
முல்லைக் கொடிபடர்ந்து
மோகனமாய் வீசுகிற
மெல்லென்ற தென்றலிலே
மிக்க மணம்பரப்பும்
ஆடுகிற தெங்கின்
அழகான சோலைதனில்
சோடிக் குயில்கள்
இருந்தங்குச் சொல்பயிலும்
இவ்விதத் தோப்பூடே
சென்றார்கள் அங்கட்டா
தெய்வக் களைசொட்டும்
சிற்றில் பலகண்டார்
சிற்றில்கட் கெல்லாம்
சிறந்தே விளங்குகிற

நற்றுய்ய இல்லம்,
அதுவே தலையில்லம்
இல்லத்துட் தூய்மை
எளிமை உருக்கொண்டு
மெல்ல நகைத்து
மிளிர்ந்து கிடந்ததுவே
வெள்ளையிட்ட மண்சுவரில்
மெய்சிலிர்க்கச் செய்கின்ற
உள்ளத் துணர்வை
ஒளிக்காமற் காட்டுகிற
சித்திரங்கள் மாட்டிச்
சிறந்து விளங்கியவே!
புத்தர் ரவீந்திரர்
புகழ்காந்தி பாரதிபோல்
நல்லோர் சிலையெல்லாம்
வைத்திருக்கப் பெற்றனவே.
சொல்லரிய வோரழகு
சூழ்ந்திருந்த தங்கேதான்
வணிகர் குலச்சீலர்
மங்கையர்கள் பின்தொடர
மணமிக்க ஆச்சிமரத்
தட்டுகுந்தா, ரப்போது
இன்னமுதா நந்தம்
எழுந்திருந்து முன்வந்து
புன்னகையே பொங்கிப்
பொலியும் முகத்தோடு

வரவேற்றார் பெண்களுடை
வரலாற்றைக் கேட்டவுடன்
பெரிதும் வருந்தியபின்
"பேரன புடையீரே
இவர்கள் சகோதரனாய்
என்னை நினைத்திடுவீர்
கவலை எனக்கேதான்"
என்றேற்றுக் கண்ணுக்குக்
கண்ணாகக் காத்துவந்தார்
ஆச்சிரமக் காரியங்கள்
பெண்களுக்குப் பேரின்பம்
ஊட்டியதால் பெண்மணிகள்
கவலைப் படுவோர்க்குத்
தொண்டுசெய்து தம்நாட்கள்
கவலையின்றி யேகாலம்
கழித்துவரும் நாளதனில்
தங்கச் சிலையென்னத்
தக்கஒரு ஆண்மகவை
செங்குமுதம் பெற்றெடுத்துச்
சிந்தை களித்தனளே!

படலம் 10

# குருதி வெள்ளத்திற் சந்திப்பு

காலை எழுந்தவர்கள்—பசி
கண்ணை மறைத்திடினும்
வேலையில் வாடுவதை—எண்ணி
வெய்யோ னெழுதனனே !
மாலையின் வானத்திடை—அவலை
வடித்த செங்குருதி
சேலையி லேகலந்த—சாயச்
செந்நிற மொத்ததடா !

தென்றலை முத்தமிட்டே—முல்லை
சிரித்ததன் மணத்தை
நன்றி யுடன் அதிலே—தோட்ட
நாறபுறு மும்பரப்ப
ஒன்றிய காதலிலே—தங்கள்
உள்ளத் துணர்வுகளை
வென்றியுடன் குயில்கள்—கீதம்
மெல்ல இசைத்தனவே.

ஆச்ரமத் துட்புறத்தில்—அமு
தானந்த ேனாடிருந்து
பேச்சிற் கலந்திருந்தார்—இரு
பெண்களின் நன மணிகள்
தூச்செயற் செங்குமுதம்—பெற்ற
தூய்ய குலவிளக்கு
ஈச்சுரப் பேருடையான்—ஓர்பால்
இன்சொல் பயின்றனனே

அப்போது தொண்டர்சிலர்—வந்து
ஆனந்தனை வணங்கி
மெய்ப்பதட் டத்துடனே—" யாங்கள்
வீடு திரும்புகையில்
செப்பரிய பிழையே—இன்று
செய்தனம் என்ன செய்வோம்
இப்படி நேருமென்றே—சற்றும்
எண்ணிட வில்லை யையா!

ஏழை யொருமனிதன்—என்ன
ஏக்கம் பிடித்தவனோ?
வாழுதற் காசையிலா—அவன்
வந்தெங்கள் கார்தனிலே
வீழ்ந்தனன் ஐயையையோ—காயம்
மிகுந்து மூர்ச்சையிட்டான்
சூழும் உதிரமுடன்—இங்கே
தூக்கி வந் திட்டோ" மென்றான்.

ஆனந்த னோடினனே—அவன்பின்
ஆயிழை ஓடினளே
மான்விழிப் பிள்ளையுடன்—அந்த
மங்கையும் ஓடினளே
போனதும் என்னகண்டார்—இரத்தம்
பொங்கி வழிந்தோட
ஈன சுரத்தினிலே—முணகும்
ஏழையைக் கண்டனரே

## வேறு

வடிகின்ற செங்குருதி
வெள்ளத் தூடே
வாய்கட்டிக் கண்செருகிக்
கிரைத் தண்டாய்
வடிவேலன் கிடப்பதனைக்
குமுதங் கண்டாள்
வாய்விட்டுக் கதறினாள்
மேலே வீழ்ந்தாள்
அடிபட்ட சிறுகொக்கோ
அவள்தான, அன்றி
அடிமுறிந்த நுனிமரமோ?
சிரத்தின் மேலே
இடிவந்து வீழுந்ததுவோ
என்ன வீழ்ந்தாள்
இவளுமொரு மரக்கட்டை
போலா னாளே!

நின்றவர்கள் பலதொண்டர்
தலைவர் மற்றோர்
நேர்ந்தகதி யறியாமற்
றிகைக்க லானார்
குன்றிருந்து வீழ்கின்ற
அருவி யேபோல்
கொட்டுகிற் கண்களுடன்
புனிதை சொல்வாள்

"என்தோழ! வடிவேலா
இவர்தாம் இந்த
இன்குமுதத் துறுதுணைவர்
என்ன சொல்வேன்
இன்றிவரை இப்படியா
காண வேண்டும்
என்செய்வேன்?" என்றழுது
கதறினளே

நாற்றிசையும் பறந்தார்கள்
மருந்து தன்னை
நயமுடனே கொணர்ந்தார்கள்
போட்டு விட்டு
காற்றுவரச் செய்தார்கள்
குமுதந் தன்னை
கட்டழகி சிலர்சேர்ந்து
தூக்கிச் சென்று
ஊற்றுநீர் முகந்தன்னில்
தெளித்தார் இன்னும்
உற்றபல சிகிச்சையெலாம்
செய்தார் பின்னர்
மாற்றுயிரே வந்ததுபோல
சிறிது மூச்சு
வருவதூஉம் போவதூஉம்
காணலானர்

வடிவேலன் தலைவருடை
இல்லத் துள்ளே
வைத்தியங்கள் செயப்பெற்று
மறுநாட் காலை
குடிவெறியில் இருப்பவன்போல்
அரை நினைவாய்
" குமுத மெங்கே ?...நானெங்கே ?....
மருத னெங்கே ?
பிடியவனைக் கொல்வேன் நான்.........
நானுஞ் சாவேன்...............
பிள்ளையெங்கே......"? எனப்பலவும்
பிதற்றும் வேளை
அடியடியாய் மிகமெதுவாய்ப்
புனிதை தாங்க
அங்கேசெங் குமுதமுமே
வந்து சேர்ந்தாள்

" அத்தான் " என் றவள் அழைத்தாள்
அருகிற் சென்று
அவன் எழுந்து " யாரம்மா......
அடடா நீயா !
எத்தனைநாள் காத்திருந்தாய்
என்னை விட்டு
இன்னொருவன் உடன் வாழ ?
இனியும் உன்னைச்

சத்தியமாய் நான் நம்பேன் ;
என்முன்னே நீ
சற்றேனும் நிற்காதே "
என்றே சொல்லிப்
பொத்தென்று படுக்கையிலே
சாய்ந்தான் அந்தப்
புனிதையுமே புனிதையுடன்
போய்விட் டாளே

காயத்தால் வலிமிகுந்து
வடிவே லந்தோ
கட்டிலிலே கிடந்தானக்
காரி கையோ
நேயமிகு புனிதையிடம்
" அக்கா அக்கா
நினைத்ததெலாம் நேர்மாறாய்ப்
போயிற் றந்தோ !
தூயமனத் தலைவர்தமைச்
சந்தே கித்தார்
துயர்கொண்டு புண்பட்ட
என் மனத்தில்
தீயொடுகோல் இட்டிட்டார்
இனியும் வாழச்
சித்தமிலை " என்றழுது
தேம்பி னாளே

" வருத்தமொழி செங்குமுதம்
நானே அந்த
வடிவேல ரிடம்சென்று
நடந்த வெல்லாம்
திருத்தமுடன் உரைத்தவர்சந்
தேகந் தன்னைச்
சிறிதின்றிப் போக்கிடுவேன்
அவரோ சாவின்
நிருத்தமுடன் விளையாடிக்
கிடக்கின் றாரால்
நினைவின்றிப் பிதற்றுகிறார்
மனங்கோ ணற்க
ஒருக்காலுஞ் சுயநினைவில்
இந்த வார்த்தை
உரைப்பரோ " எனப் புனிதை
தேற்ற லானாள்

படலம் 11

# உதிர்ந்த குமுதம்

வடிவேலன் குணமுற்றான்
புனிதை யோர்நாள்
மனங்கவரும் பாலனுடன்
அங்கு வந்தாள்
அடியிருந்து கடைசிவரை
நடந்த காதை
அத்தனையும் உரைத்திட்டாள்
அவனுங் கேட்டான்.
" குடியிருளைப் போக்கவரு
குல விளக்கே
கொடியன்யான் குமுதத்தைப்
பழித்தேன் " என்று
மடியிருத்தி மிகத்தழுவி
உச்சி மோந்து
மகனவனை முத்தமிட்டு
வருத்தத் தோடு

" புனிதை யெனப் பேர்கொண்ட
புனிதை யேநீ
புவியிலுள்ள பெண்மணிகட்
கரசி யேநீ
தனிசுகத்தைத் துறந்தென்றன்
நாதி யற்ற
நற்றுணையைக் காத்தனையிந்
நன்றி தன்னை

இனியொருநா ளொருக்கணமும்
மறக்க வல்லோம்
எங்கள்குலத் தெய்வமெனப்
போற்று வோம்யாம்
பனிவரையை ஒத்தகுணக்
குன்றே" யென்று
பன்முறைகள் மனங்குழைந்து
வாழ்த்தி னானே

"பேசுவதும் இனிப்போதும்
சென்றே அந்தப்
பிறைநுதலைக் கற்பரசைப்
பெண்கட் குள்ளே
மாசுமறு வற்றவொரு
மரக தத்தை
மலர்களிலே மென்மையுறும்
அனிச்சம் அன்று
வீசியநுங் கோபமெனுங்
கனலில் வாடி
வெம்புகிற குமுதத்தைத்
தேற்றச் செல்வோம்
பேசுவதும் இல்லையவள்
உண்ப தில்லை
பெரிதுமே வருந்துகிறாள்"
என்றப் பெண்தான்

வேலவனை அழைத்தழுகி
 கிடக்கும் மற்றோர்
மென்மலர்சூழ் சிறுகுடிசை
 தனையடைந்தாள்
பாலகனுந் தந்தையின்றன்
 மார்பணைந்து
" பப்பப்பா மம்மம்மா "
 பயின்று சென்றான்.
நீலவிழிக் குமுதமுமோர்
 கட்டில் தன்னில்
நிலைகுலைந்து உதடெல்லாம்
 நீலம் பாய்ந்து
காலனுடன் செல்வதற்குப்
 பயணமாகிக்
கையிலொரு நிருபமுடன்
 கிடந்தாளம்மா.

வடிவேலன் அந்நிலையைக்
 கண்டான் அந்தோ
வாய்விட்டுக் கதறினான்
 துடித்தான் பின்னர்
" மடையன்யான் செய்தபிழை
 அனைத்தும் உன்றன்
மாசற்ற தூமனத்திற்
 பதிக்க வேண்டா

கடையன்யான் உனையறியாக்
கசடன் என்றன்
கண்மணியே இன்னுயிரே
கற்பே நின்னை
உடையன்யான் விளைவித்த
துயர் பொறுப்பாய்
ஒருக்காலும் பிழையே" னென்
றோல மிட்டான்

செங்குமுதம் தாழ்குரலிற்
சேதி சொன்னாள்
"தேவாநும் அடியாள்யான்
கடைசி யாக
உங்களையோர் வரங்கேட்பேன்
ஒத்துக் கொள்வீர்
உயிரின்னுஞ் சிறுபோழ்தில்
ஓடிப் போகும்
இங்கிந்தக் கடிதத்தில்
எல்லாங் காண்பீர்"
என்றுரைத்துக் கடிதத்தைக்
கொடுத்தாள். வேலன்
"மங்கையர்கட் கரசேநீ
யென்ன செய்தாய்?
மாளுதற்குக் காரணமென்
மணியே" என்று

அழுக்கேட்ட ஆரணங்கு
உரைப்பாள் " சுவாமி
அஃதெல்லாம் கடிதத்தில்
காண்பீ ரிப்போ
தொழுதும்மைக் கேட்கும் வரம்
இதுதா " னென்று
தொட்டந்தக் காளையின்றன்
வலகை பற்றி
அழுதங்கே நிற்கின்ற
புனிதை யின்றன்
அங்கையினைப் பற்றியொன்று
சேர்த்துச் சொல்வாள்
" அழுதபடி கைகோத்தீர்
சிரித்து வாழ்வீர் !
அதுவேயென் ஆவ " லெனச்
சொல்லி யந்தோ

மலர்விழிகள் இமை மூட
முல்லைப் பற்கள்
வனப்புமிகும் இதழ்மூட
வனசை தன்னில்
அலர்ந்திட்ட செங்குமுதம்
இன்ன லெலலாம்
அடைந்திட்டு தேர்நிலையில்
சாந்தி தேடி

பலராமுக வேல்புனிதை
பாலன் விம்மப்
பக்கத்தில் ஆனந்தன்
பதறி நிற்க
உலகமெனும் நீர்நிலையில்
அந்தோ வந்தோ
உதிர்ந்ததுவே பரிதாபம்
உரைக்கற் பாற்றே!

படலம் 12

# இறுதிக் கடிதம்

கரையில் காதல கழலினை போற்றி
வரைகுதும் இறைவ வணக்கம் எம்மான்
தாயையும் தந்தை தனையும் விட்டு
பேயும் அஞ்சும் பேரிர வும்மோடு
ஊர்வழி வந்தேன் உள்ளக் காதலால்
நீரெனை அறிகிலீர் நிந்தனை செய்தீர்

இன்று—

சாவோ என்னைக் கூவிநிற் கிறது
உலகெனும் மேடையில் பலவிதம் நடித்தே
இன்பம் எதுவும் இதுவரை காணுது
துன்பமே அடைந்தவென் சோக நாடகம்
இறுதி, யுற்றது இன்னும் சிறிதுதான்

தலைவ—

நும்மிடம் கேட்கும் வரங்கள் மூன்றுள

ஒன்று—

தந்தை செய் இன்னலைத் தவிர்ப்பதற்காக
வெந்துயர்க் கடலில் என்னுடன் வீழ்ந்து,
உருகி ஒளிரும் உவமையில் பொற்குணத்
திருமிகு புனிதையைத் தெய்வச் சாட்சியாய்
எனக்குப் பதிலாய் ஏற்றருள் செய்வீர்

இரண்டு—

மனதில் மாசிலா மாண்புறு தலைவர்
நினைப்பினிலும் பாவம் நிகழ்த்துவ ரல்லர்
அவருடன் அன்புகொண் டாருயிர் மைந்தன்
உலகத் தொண்டனாய் உத்தம குணத்தனாய்
வாழப் பழக்கவும் வரமருள் செய்வீர்

மூன்று—

ஏழைகள் எல்லாம் இறைவன் ஆலயம்
பாழும் பசியே பாவப் பிறப்பிடம்
பசியால் பெண்கள் பரத்தைய ராகுவர்
பசியால் மக்கட் பண்பு மறைந்திடும்
பசியால் கொலையுங் களவும் பரவும்
பசியே நம்மைப் பாமர ராக்கும்
பசியெனும் பேயைப் பாரி லிலாது
ஓட்டிட உழைப்பீர்! உங்கள், குமுதம்.

அந்தோ குமுதம் என்னே அறிவிலி!
சந்தே கித்திடிற் சாகவா வேண்டும்?
உண்மை என்றும் உலகில் நிலைக்கும்
என்றே அறிந்தும் கோழை எண்ணம்
கொண்டுநீ நஞ்சை யுண்டனை யந்தோ
கோழையும் கூடா தச்சமுங் கூடாது
வாழ்வை வெறுத்தல் மனிதர்க்குத்
தாழ்வா கும்மே தாழ்வா கும்மே!